வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : STC 405 of 2024

வழக்கு சாட்சி – PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லட்சுமிநாராயணன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | தாமோதிரன் | தொழில் | : | ஆட்டோ ஓட்டுநர் |
| கிராமம் | : | வடுகபாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 02.04.2024.

குவிமுச 200 ன் கீழான பிரமாண வாக்குமூலம் : நாள்: 02.04.2024

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான் என்று உறுதி கூறுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் தாக்கல் செய்கிறேன்.

1) 13.12.2023 ஆம் தேதியிட்ட எதிரியால் வழங்கப்பட்ட கரூர் வைசியா வங்கி, பல்லடம் கிளையின் 000164 என்ற எண் கொண்ட காசோலை அசல் ம.சா.ஆ.1 ஆகவும்,

2) பிராமிசரி நோட்டு ம.சா.ஆ.2 ஆகவும்,

3) 14.12.2023 ஆம் தேதியிட்ட நான் கணக்கு வைத்திருக்கும் வங்கியால் திருப்பப்பட்ட மெமோ அசல் ம.சா.ஆ.3 ஆகவும்,

4) 03.01.2024 ஆம் தேதியிட்ட நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.4 ஆகவும்,

5) 04.01.2024 ஆம் தேதியிட்ட எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ.5 ஆகவும்,

6) 13.01.2024 ஆம் தேதியிட்ட எதிரி தனது வழக்கறிஞர் மூலம் புகார்தாரர் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

புகார்படி தீர்ப்பாகவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.04.02 19:27:54 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்